மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.80/2018

வாக்குமூலம்: பி.வா.சா.1 ராமசுந்தரம்

13.08.2024: சாட்சி ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை:– 1ம் பிரதிவாதி கே.சி.கிருஷ்ணன் உங்களுடைய உடன்பிறந்த தம்பி என்றால் சரிதான். இந்த வழக்கு 2,3,4 பிரதிவாதிகளுக்கு 1ம் பிரதிவாதி சொத்தை மொத்தமாக கிரையம் செய்துகொடுக்க ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஒப்பந்தம் செல்லாது என பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 1ம் பிரதிவாதி ஏற்படுத்திக்கொடுத்த வா.சா.ஆ.2 கிரைய உடன்படிக்கையை ரத்து செய்ய உங்களுக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. நீங்கள் இந்த வழக்கில் கோரியுள்ள எதிர்பரிகாரத்தில் வழக்குச்சொத்தில் உங்களுக்கு உள்ள உரிமையை நிலைநாட்ட கேட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். வாதி வழக்குச் சொத்தில் எனக்கு உரிமை இல்லை என கூறியுள்ளதால் அதை மறுத்து எனக்கு உள்ள உரிமையை நிலைநிறுத்த எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளேன். 1ம் வாதி தன்னுடைய நீதிமன்ற சாட்சியத்தில் வழக்குச்சொத்தில் உங்களுக்கு உரிமை உள்ளது என ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரிதான். வழக்கு முழுமையாக கிரைய ஒப்பந்தம் வா.சா.ஆ.1–ஐ பொறுத்து ஏற்பட்டுள்ளதால் சொத்தில் யார், யாருக்கு உரிமை உள்ளது என்பது பற்றி இந்த வழக்கில் தீர்மானிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. முன்பாத்தியஸ்தர் கணியூர் கிருஷ்ண அய்யர் என்பவரின் வாரிசுகள் அனைவருக்கும் வழக்குச்சொத்தில் பங்கு உரிமை உள்ளது என்றால் அவரின் அனைத்து ஆண் வாரிசுகளுக்கும் உரிமை உண்டு. கணியூர் கிருஷ்ண அய்யரின் கொடிவழி பட்டியல் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். கொடிவழி பட்டியலில் வெங்கடகிருஷ்ணன் மற்றும் அவரின் ஆண் மகன் ராஜகோபாலன் இறந்தபிறகு அவர்களுக்கு அடுத்ததாக கே.ஆர்.சுந்தர்ராஜ அய்யர் சொத்துக்களை நிர்வகித்து வந்தார் என நீங்கள் முதல் விசாரணை சாட்சியமளித்துள்ளீர்கள், ஆனால் கே.ஆர்.சுந்தர்ராஜ அய்யர் வெங்கட கிருஷ்ண அய்யர் இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் சரிதான். தட்டச்சு பிழையாக ஒரு வரி விடுபட்டுவிட்டது. ஆகவே நீங்கள் சொல்லியுள்ள சொத்தின் உரிமை மற்றும் நிர்வாக உரிமை பற்றிய விபரங்கள் தவறானது என்றால் சரியல்ல. இருப்பினும் 1ம் வாதி குறுக்கு விசாரணையில் உங்களுக்கு உரிமை உள்ளது என ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரிதான். அவர் வழக்குரையில் அவ்வாறு சொல்லவில்லை. வாதிகள் வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தம் ரத்து செய்ய தாக்கல் செய்துள்ள

இந்த வழக்கில் நீங்கள் கோரியுள்ள வழக்குச்சொத்தின் உரிமை குறித்த எதிர்கோரிக்கை பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(1 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என சொல்லப்பட்டது)

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

R. KARTHIKEYAN

Digitally signed by R. KARTHIKEYAN
Date: 2024.08.16 16:39:58 +0530

District Munsif,
Palani.